பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

26 06 2026 FRIDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியாவின் பொதுவிநியோக நிதி சேவை டிஜிட்டல் கட்டமைப்பு, அனைத்து தரப்பு மக்களின் வாழ்க்கையையும் எளிதாக்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இந்தியா முன்னோடியாக உருவெடுத்து வருவதாக இந்தியாவுக்கான ஜெர்மன் தூதர் திரு. Philip Ackermann கூறியுள்ளார்

3. சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

4. தமிழ் மொழியின் வரலாற்றுப் பெருமையை உலகறியச் செய்தவர் ம.பொ.சிவஞானம் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

5. அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

இந்தியாவின் பொதுவிநியோக நிதி சேவை டிஜிட்டல் கட்டமைப்பு, அனைத்து தரப்பு மக்களின் வாழ்க்கையையும் எளிதாக்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லி வந்துள்ள நெதர்லாந்து அரசி Maxima-வுடனான சந்திப்பு குறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப்பதிவில், இந்தியாவின் டிஜிட்டல் கட்டமைப்பு நாட்டு மக்கள் அனைவரையும் சென்றடைந்துள்ளதாக கூறினார்.

கூடுதல் செலவினங்கள் ஏதுமின்றி மக்கள் இதனை பயன்படுத்தி வருவாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் டிஜிட்டல் கட்டமைப்பை உலக நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதில் இந்தியா மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதாகவும் பிரதமர் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

ஐ.நா பொதுச்செயலாளரின் நிதி தொடர்பான சிறப்பு வழக்கறிஞராகவும் செயலாற்றி வரும் Maxima-வின் இந்தியப் பயணம், மின்னணு பொது கட்டமைப்பின் வளர்ச்சி மற்றும் நீடித்த பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இந்தியா முன்னோடியாக உருவெடுத்து வருவதாக இந்தியாவுக்கான ஜெர்மன் தூதர் திரு. Philip Ackermann கூறியுள்ளார்.

புதுதில்லியில் தனியார் செய்தி நிறுவனத்திற்கு பேட்டியளித்த அவர், இந்தியாவும் ஜெர்மனியும், பசுமை மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான எரிசக்தி திட்டங்களில் இணைந்து பணியாற்றி வருவதாக தெரிவித்தார்.

வர்த்தகம், அரசியல் உள்ளிட்ட துறைகளிலும் ஒத்துழைப்பு வலுப்பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

இந்தியா - ஐரோப்பிய தாராள வர்த்தக ஒப்பந்தம், மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், ஜெர்மன் தொழிலதிபர்கள் அதிக அளவில் இந்தியாவில் முதலீடு செய்ய ஆர்வம் கொண்டுள்ளதாகவும் திரு. Philip Ackermann குறிப்பிட்டார்.

\>>>>>>><<<<<<

மொஹரம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, இஸ்லாமியர்கள் நாடுமுழுவதும் முஹமது நபியின் பேரனான Hazrat Imam Hussain மற்றும் அவருக்கு துணையாய் நின்றவர்களின் தியாகத்தை நினைவு கூரும் வகையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

இந்நாளையொட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில், Imam Hussain-ன் தியாகத்தை நினைவுகூர்ந்துள்ளார்.

உண்மைக்காகவும், நீதிக்காகவும், மனஉறுதியுடன் போராடி தியாகம் செய்ததை மக்கள் என்றும் நினைவில் கொண்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அமைதி மற்றும் சமூகநல்லிணக்கத்திற்கு வலுசேர்க்கும் வகையில் இந்நாள் அமைந்துள்ளதாகவும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில் Hazrat Imam Hussain-னின் தியாகம் போற்றுதலுக்குரியது என்று குறிப்பிட்டுள்ளார்.

உயிரையும் துச்சமென மதித்து மனவலிமையுடன் போராடிய அவரது செயல், என்றும் போற்றுதலுக்குரியது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

\>>>>>>><<<<<<

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில், போதைப்பொருள் பயன்பாடற்ற இந்தியாவை கட்டமைப்பதில் மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

போதைப்பொருள் பழக்கம் மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் நடைபெற்று வரும் நிலையில், பல்கலைக் கழகங்கள், கல்வி நிறுவனங்கள்

மற்றும் அமைப்புகள் போதைப்பொருளுக்கு எதிரான இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் சிறப்பாக பணியாற்றி வருவதற்கு திரு.சி.பி. ராதாகிருஷ்ணன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில், போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அனைவரின் முயற்சிகளுக்கும் தமது பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் புழக்கத்திற்கு துணையாக நிற்கும் கட்டமைப்புகளை ஈவு இரக்கமின்றி அழிக்க வேண்டும் என்றும் திரு. அமித் ஷா கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. விஜய் விடுத்துள்ள செய்தியில், இளைஞர்களின் எதிர்காலத்தை பாதுகாத்து, குற்றங்களை தடுக்கவும், போதைப்பொருள் இல்லாத தமிழகத்தை உருவாக்கவும், போதைப்பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் அவசியம் என்று வலியுறுத்தியுள்ளார்.

இந்நாளையொட்டி, தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் நடைபெற்றன.

போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் உடல்நல பாதிப்புகள் குறித்து சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியின் இணைப் பேராசிரியர் டாக்டர் சுகந்தி செல்வராஜன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – டாக்டர் 45 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இரண்டு நாள் பயணமாக நாளை Seychelles புறப்பட்டுச் செல்கிறார்.

அந்நாட்டின் பொன்விழா கொண்டாட்டங்களில் பிரதமர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

இந்த விழாவில் இந்திய ராணுவ படைப்பிரிவினரும், இரண்டு கடற்படை கப்பல்களும் பங்கேற்கவிருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பிரதமர் தமது பயணத்தின் போது, Seychelles அதிபர் Dr. Patrick Herminie-யை சந்தித்து, இருதரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்து விவாதிக்கவுள்ளார்.

மண்டல மற்றும் சர்வதேச அளவிலான முக்கிய விஷயங்கள் குறித்தும் அதிபருடன் அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

செசல்ஸ் நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ள திரு. நரேந்திர மோடி, அந்நாட்டில் உள்ள இந்திய வம்சாவளியினரையும் சந்தித்து பேசவுள்ளார்.

>>>>>>><<<<<<<

வந்தேமாதரம் பாடலை இயற்றிய *Bankim Chandra Chatterjee*-ன் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்டோர் அன்னாருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

>>>>>>><<<<<<<

தமிழினத்தின் மொழி, பண்பாடு மற்றும் வரலாற்றுப் பெருமையை உலகறியச் செய்தவர் ம.பொ.சிவஞானம் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

ம.பெ.சி-யின் பிறந்தநாளையொட்டி அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தமிழுக்காக அவர் ஆற்றிய பணிகளையும், அர்ப்பணிப்பையும் நன்றியுடன் நினைவுகூருவதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மொழி வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பங்களிப்பு போற்றுதலுக்குரியது என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

பிரதமரின் இல்லங்களில் சூரியமின்சக்தி அமைக்கும் திட்டம், தமிழகத்தின், அரியலூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மானிய உதவியுடன், கடனுதவியும் அளிக்கப்படுவதால் பொதுமக்கள் இத்திட்டத்தில் ஆர்வம் காட்டி வருவதாக இத்திட்டத்தின் பயனாளி ராஜா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பயனாளி 55 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

வலுவான நம்பிக்கை மிகுந்த விநியோக கட்டமைப்பை, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கட்டமைப்பதற்கான இரண்டாவது Pax Silica உச்சிமாநாடு வாஷிங்டனில் நடைபெற்றது.

அமெரிக்கா தலைமையேற்று நடத்தும் இம்மாநாட்டில் இந்தியா உள்ளிட்ட 34 நாடுகள் பங்கேற்றன.

இந்தியாவின் சார்பில் மின்னணு தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் செயலர் திரு. S. Krishnan மற்றும் தொழில்துறை பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

செமி கண்டக்டர், செயற்கை நுண்ணறிவு மற்றும் விநியோக கட்டமைப்பிற்கான தொழில்நுட்பம் உள்ளிட்டவை குறித்து இந்திய பிரதிநிதிகள் தங்களது கருத்துக்களை இம்மாநாட்டில் முன்வைத்தனர்.

>>>>>>><<<<<<<

அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-14, 21-13 என்ற செட்கணக்கில் மலேசியாவின் Zii Jia Lee-யை வென்றார்.

இப்போட்டியின் ஒற்றையர் பிரிவுகளில் Rounak Chouhan, தன்வி சர்மா, Devika Sihag, ரக்ஷிதா ஸ்ரீ ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>>><<<<<<<

புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

லண்டனில் இப்போட்டி இரவு மணி 10-30க்கு தொடங்குகிறது.

>>>>>>><<<<<<<

ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே – சீனாவின் Fangran Tian இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>>>><<<<<<<